1979 அக்டோபர் 29]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, அதைச் சுற்றுலா மையமாக ஆக்க முடியுமா என்பதைப்பற்றி சுற்றுலா துறையிடத்திலே பரிந்துரை செய்யும்படி அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது. விவரம் கிடைத்த பிறகு விரிவாக பதில் அளிக்கலாம்.

Cardamom Resarch Centre

* Q. No. 26 — Thiru C. MANICKAM : Will the Hon. the Minister for Informatian and Religious Endowments be pleased to state—

(a) whether the Government are aware of the proposal of the cardamom Board, to open a Research Centre in this State ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) மற்றும் (ஆ) கொடைக்கானல் சரகத்திலுள்ள தாண்டிக்குடியைச் சார்ந்த சங்கரிகானலில் குத்தகை எண். 15-ல் உள்ள நிலத்தில் ஓர் ஆராய்ச்சி மையம் நிறுவ வேண்டி 30 ஹெக்டர் பரப்பு காட்டுநிலத்தை குத்தகைக்கு ஏலக் காய் மத்திய சர்க்கார் வாரியம் கோரியது. மதுரை வடக்கு கோட்டத்தில் பாம்புக்கல்லார் ஒதுக்குக் காடுகளிலுள்ள குத்தகை எண். 15-ல், 25 ஹெக்டேர் காட்டு நிலங்களை ஆராய்ச்சி நிலையம் அமைக்க வருடம் ஒன்றிற்கு ஹெக்டேருக்கு ரூ. 250 வீதம் குத்தகை வசூலித்து ஏலக்காய் வாரியத்திற்கு கொடுக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. ஒ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, ஏலக்காய் வெளிநாட்டு நாணயத்தைச் சம்பாதிப்பதில் மிக அதிகமான வருவாய் அளிக்கும் அவசியமான பொருளாக இருப்பதனால் தமிழ் நாட்டில் இன்னும் அதிக அளவிலே உற்பத்தி செய்வதற்கும் காடுகளை அழிக்காமல் இருப்பதற்கும் நம் மாநில சர்க்கார் ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, ஏலக்காய் பயிரிடுவதற்கு அடர்த்தியான காடுகளும், உயர்ந்த மரங்களும் தேவைப்படுகின்றன. ஆகவே, அதை ஒட்டியும் காடுகள் பாதுகாக்கப்படுகிற சூழ்நிலை இருக்கிற காரணத்தால், ஏலக்காயினுடைய உற்பத்திக்கு அரசு ஊக்கம் அளிக்கும் முயற்சியை மேற் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1979 அக்டோபர் 29

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிடும் போது கொடைக் கானல் பகுதியில் தாண்டிக்குடி பகுதியில் ஏலக்காய் வாரியத் திற்கென ஆராய்ச்சி செய்ய, இடம் ஒதுக்கீடு செய்வது பரி சீலனையில் இருப்பதாகக் குறிப்பிட்டார். அதே இடத்தை காஃபி வாரியமும் தனக்கு, ஆராய்ச்சிக்காக வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இரண்டு வாரியங்களும் கேட்பதால் எந்த வாரியத்திற்கு அந்த இடத்தை ஒதுக்க வேண்டுமென்பதிலே தகராறு இருப்பதாகத் தெரிகிறது. எனவே, இரண்டு வாரியத் திற்கும் தாண்டிக்குடிக்குப் பக்கத்தில் ஆராய்ச்சிக்கென நிலம் கொடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, மூலக் கேள்வி ஏலக்காய் வாரியத்திற்கு இடம் ஒதுக்குவதைப் பற்றியது. 25 ஹெக்டேர் காட்டு நிலங்களை, மதுரை வடக்குக் கோட்டத்தில் பாம்புக் கல்லார் பகுதியில் ஒதுக்கியிருக்கிறோம். காஃபி போர்டு கேட்பதைப் பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் அதற்குப் பதில் கிடைக்கும்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏலக்காய் விலை ஒவ்வொரு வரு ஷத்திலும் ஃப்ளக்ச்சுவேஷனாக இருக்கிறது. அதனைப் பார்த்தால் ஒரு வருஷத்திலே ரூ. 200-க்கு விற்கிறது, அடுத்த வருஷத்திலே ரூ. 100-க்கு விற்கிறது. ஆகவே, ஏலக்காய் போர்டு மூலமாக ஏலக்காய் விற்பதற்கு அரசாங்கம் முன்வருமா? அல்லது, ஏலக்காயைத் தனியார் விற்பதற்குத் தடை விதிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, ஏலக்காய் வாரியத்திற்கு இடம் ஒதுக்குவதைப் பற்றியது மூலக் கேள்வி. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏலக் காயினுடைய விற்பனையைப் பற்றிக் கேட்கிறார்கள். தமிழகத் தைப் பொறுத்த வரையில் தனியார்கள் மூலம், ஏலக்காய் வாரியத்தோடு தொடர்பு கொண்டு, விற்பனை நடைபெற்று வருகிறது. இதை அரசு கூர்ந்து கவனித்துக் கொண்டு வருகிறது. ஏலக்காயின் உற்பத்தி, அதனுடைய விற்பனை, ஆகியவற்றையும் தமிழ்நாடு அரசினுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியுமா என்பதை ஆலோசித்து வருகிறது.